**இலங்கை மத்திய வங்கி**

**2021 பெப்புருவரி 17 நிதிக்குத்தகைக்குவிடுதல் சட்டப் பணிப்புரைகள் 2021இன் 02ஆம் இலக்கம்**

**உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்படுத்தல் நோக்கங்களுக்காக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் மீதான 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 1(i)(ஆ) பின்வருவனவற்றின் மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.

   (ஆ) “முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 80 சதவீதம்”.

ஒப்பம்

**ஜே டி எஸ் ஜே நாணயக்காரா**

பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி